## இயல் – 2
## பகுதி-அ

**1.ஒருமதிப்பெண்வினா**

**1.மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க,**
அ) நரி ஊளையிடும்
ஆ)புலிமுழங்கும்
இ) யானை உறுமும்
ஈ)குதிரை கத்தும்
**விடை : அ ) நரி ஊளையிடும்**

**2.கீழ்க்காணும் தொடர்களில் ‘ அரவம்’ என்னும் பொருள் தரும் சொல் அமைந்த தொடர் எது?**
அ) பன்றிகள் கிழங்குகளைத் தோண்டி உண்ணும்,
ஆ) கரடிகள் கரையான் புற்றுகளை நோக்கிச் செல்கின்றன.
இ) குரங்குகள் மரத்தில் இருந்து கனிகளைப் பறித்து உண்ணுகின்றன.
ஈ) பன்றிகளைக் கண்ட பாம்புகள் கலக்கம் அடைகின்றன.
**விடை : ஈ ) பன்றிகளைக் கண்ட பாம்புகள் கலக்கம் அடைகின்றன.**

**3. இரவில் மெல்லிய நிலவொளியில் படையெடுத்து வருபவை எவை?**
அ) காகங்கள்
ஆ) மரங்கொத்திப் பறவைகள்
இ) வௌவால்கள்
ஈ)புறாக்கள்
**விடை : இ ) வௌவால்கள்**

**4.கீழ்க்காணும் சொற்களில் ‘துஷ்டி’ என்னும் பொருள் தரும் சொல்லைத் தேர்ந்தெடுக்க.**
அ) பயம்
ஆ) துக்கம்
இ)மகிழ்ச்சி
ஈ) வெறுப்பு
**விடை : ஆ ) துக்கம்**

**5. மிகுந்த நினைவாற்றலைக் கொண்ட விலங்கு எது?**
அ) சிங்கம்
ஆ கரடி
இ) புலி
ஈ) யானை
**விடை : ஈ ) யானை**

**6.ஒரு நாட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடாக விளங்கும் விலங்கு எது?**
அ) புலி ஆ கரடி
இ)சிங்கம் ஈ) மான்
**விடை : அ ) புலி**

**7. தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம் எது?**
அ) திருச்சி ஆ)மதுரை
இ) கன்னியாகுமரி ஈ) மேட்டுப்பாளையம்
**விடை : ஈ ) மேட்டுப்பாளையம்**

**8.ஆசியச் சிங்கங்கள் வாழும் சரணாலயம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?**
அ) தமிழ்நாடு
ஆ) உத்திரப்பிரதேசம்
இ) ஆந்திரப்பிரதேசம்
ஈ) குஜராத்
**விடை : ஈ ) குஜராத்**

**9. ஒன்றரை மாத்திரை அளவுபெறும் 'ஐ'காரம் இடம்பெறும் சொல்லைத் தேர்ந்தெடுக்க,**
அ) வையம்
ஆ) சமையல்
இ) பறவை
ஈ) இளைஞன்
**விடை : அ ) வையம்**

**10. 'முஃடீது' என்னும் சொல்லில் அமைந்த ஆயுத எழுத்து எத்தனை மாத்திரை அளவு ஒலிக்கிறது?**
அ) ஒன்று
ஆ) அரை
இ) கால்
ஈ) ஒன்றரை
**விடை : இ ) கால் பகுதி ஆ**

## II. சிறுவினா

**1. பாம்புகள் கலக்கமடையக் காரணம் என்ன?**
பன்றிகள் காட்டில் உள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணும். அதனைக் கண்டு நஞ்சினை உடைய பாம்புகள் கலக்கமடையும்.

www.grlvidya.in

**2.காட்டில் கார்த்திகை விளக்குகளாகக் காட்சி அளிப்பவை எவை?**
மலர்கள்

**3.அதிமதுரத் தழையைத் தின்ற யானை புதுநடை போடுவதன் காரணம் என்ன?**
அதுமதுரத் தழைகள் மிகுந்த சுவையை உடையன . எனவே யானைகள் புதுநடை போடுகின்றன.

**4.அதிமதுரம் குறித்து நீங்கள் அறிவது யாது?**
அதிமதுரம் மிகுந்த சுவையுடையது

**5.ஆசியயானைகளுக்கும், ஆப்பிரிக்க யானைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?**
ஆசிய யானைகளில் ஆண் யானைக்குத் தந்தம் உண்டு. பெண் யானைக்குத் தந்தம் இல்லை. ஆனால் , ஆப்பிரிக்க யானைகளில் இரண்டுக்குமே தந்தம் உண்டு.

**6.'பண்புள்ள விலங்கு' என்று புலிகள் அழைக்கப்படுவதன் காரணம் என்ன?**
புலி தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த விலங்கையும் வேட்டையாடுவதில்லை. எனவே , அது பண்புள்ள விலங்கு என அழைக்கப்படுகிறது.

**7. மகரமெய் முழுமையாக ஒலிக்கும் இடங்களுக்கு இரண்டு சான்றுகள் தருக.**
அம்மா , பாடம் படித்தான் ஆகிய சொற்களில் மகரமெய்யெழுத்து தனக்குரிய அரை மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.

## பகுதி-இ

**III. பெருவினா**

**1. பெருவாழ்வு வாழ்ந்த மரம் விளக்குக.**
* பெருவாழ்வு வாழ்ந்த மரம் பேய்க்காற்றில் வேரோடு சாய்ந்துவிட்டது.
*விடிந்தும் விடியாததுமாய்த் துக்கம் விசாரிக்க ஊர்மக்கள் குழந்தைகளோடு அங்கு விரைந்து செல்கிறார்கள்
*குன்றுகளின் நடுவே மாமலைபோல் அந்த மரம் நிற்கட்டும்
* நேற்று மதியம் நண்பர்களுடன் தன்மகன் அந்த மரத்தின் நிழலில் தான் விளையாடினான்.
* மரத்தின் குளிர்ந்த நிழலில் தான் கிளியாந்தட்டு விளையாடி மகிழ்ந்தோம்.

www.grlvidya.in

2.யானை மற்றும் கரடி போன்ற விலங்குகளின் வாழ்வியல் குறித்து நீ அறிவது யாது?

* உலகில் இரண்டு வகையான யானைகள் உள்ளன. ஒன்று ஆசிய யானை , இன்னொன்று ஆப்பிரிக்க யானை .
* ஆசிய யானைகளில் ஆண் யானைக்குத் தந்தம் உண்டு. பெண் யானைக்குத் தந்தம் இல்லை.
* ஆப்பிரிக்க யானைகளில் இரண்டுக்குமே தந்தம் உண்டு.
* யானைகள் எப்போதும் கூட்டமாகத்தான் வாழும்.
* பெண் யானைதான் தலைமை தாங்கும்.
* யானை மிகுந்த நினைவாற்றல் கொண்ட விலங்கு . கரடி
* கரடி ஓர் அனைத்துண்ணி .
* பழங்கள் , தேன் போன்றவற்றை உண்பதற்காக மரங்களில் ஏறும்.
* உதிர்ந்த மலர்கள் , காய்கள் ,கனிகள் , புற்றீசல் ஆகியவற்றைத் தேடி உண்ணும்.
* கறையான் அதற்கு மிகவும் பிடித்தமான உணவு.
* நன்கு வளர்ந்த கரடி 160 கிலோ எடை வரை இருக்கும்.

**பகுதி-ஈ**

**IV.செயல்பாடு:**

காட்டு விலங்குகள் சார்ந்த ஒலி மரபுத்தொடர்களைத் (5)தனித்தாளில் எழுதுக

www.grlvidya.in